


**சோமசுந்தர விநாயகர் பாமாலை**

1. அன்னதானக் கடவுளே
2. ஆலயத்து அறிவொளியே
3. இணையத்தில் இணைப்பவனே
4. ஈசனின் தனயனே
5. உலகம் சுற்றுபவனே
6. ஊர்த்துவ கணபதியே

7. எங்கும் தெரிபவனே
8. ஏற்றம் தருபவனே
9. ஐந்து கரத்தவனே
10. ஒற்றைக் கொம்பனே
11. ஓங்கார நாயகனே
12. ஔவைக்கு அருளியவனே

13. கணங்களின் அதிபதியே
14. காக்கும் கயமுகனே
15. கிராமங்களை வளர்ப்பவனே
16. கீர்த்திகள் பெற்றவனே
17. குணங்கள் பொருந்தியவனே
18. கூடாரை அழிப்பவனே
19. கெடுதல் அற்றவனே
20. கேள்வியின் நாயகனே
21. கைபேசியில் அருள்பவனே
22. கொற்றவன் கடவுளே
23. கோபுர வாசனே
24. கௌரியின் புதல்வனே

25. சங்கடங்கள் தீர்ப்பவனே
26. சாத்திர மூலனே
27. சித்தி புத்தி மணாளனே
28. சீரிய சக்தியே
29. சுற்றும் மூஷிகனே
30. சூத்திரம் எழுதியவனே
31. செந்தமிழ் பாவலனே
32. சேவிக்கத் தக்கவனே
33. சைன்யத்தின் காவலனே
34. சொல்லின் செல்வனே
35. சோமசுந்தரனே
36. சௌந்தர்ய நாயகனே

37. தடைகள் அகற்றுபவனே
38. தாரணியின் தலைவனே
39. தித்திக்கும் பூரணமே
40. தீவினை தீர்ப்பவனே

41. தும்பிக்கை ஆழ்வாரே
42. தூய்மையின் வடிவமே
43. தெளிவைத் தருபவனே
44. தேடலின் முடிவே
45. தைரியம் தருபவனே
46. தொன்மை ஆனவனே
47. தோத்திர முதலே

48. நர்த்தன விநாயகனே
49. நாடுபவரைக் காப்பவனே
50. நிம்மதியின் இலக்கணமே
51. நேர்மை நடுநாயகமே
52. நுண்ணுயிர் காப்பவனே
53. நூதன அறிவே
54. நெற்றியின் பட்டையே
55. நேர்த்தியின் வடிவமே
56. நைவினை அகற்றுபவனே
57. நொடியான காலமே
58. நோகாத உயிரே

59. படிக்காசு விநாயகனே
60. பானை வயிற்றோனே
61. பிணிகளைப் போக்குபவனே
62. பீதியைக் குறைப்பவனே
63. புத்துயிர் அளிப்பவனே
64. பூமிக்கு முதல்வனே
65. பெருத்த உருவமே
66. பேரின்ப வடிவமே
67. பைந்தமிழ் நாயகனே
68. பொதுவான கடவுளே
69. போருக்குக் காவலனே
70. பௌதீக அதிசயமே

71. மக்களின் விநாயகனே
72. மாசில்லா பெருமானே
73. மிஞ்சிய வயிற்றோனே
74. மீனாட்சி மைந்தனே

75. முதலான மூர்த்தியே
76. மூஷிக வாகனனே
77. மெத்தன அமர்ந்தவனே
78. மேன்மை நாயகனே
79. மொத்தமான கணபதியே
80. மோதகப் பிரியனே
81. மௌனத்தின் அதிபதியே

82. ஞாலம் காப்பவனே
83. ஞானத்தின் மூலமே
84. ஞாபக ஆணிவேரே
85. யாவரையும் கவர்பவனே
86. யானைமுக அழகனே
87. லட்சிய தொடக்கமே
88. லாபத்தை பொழிபவனே
89. வரங்களைத் தருபவனே
90. வாகன ஆசானே
91. வினைகள் தீர்ப்பவனே
92. வீதிகளில் நிறைந்தவனே
93. வெட்டவெளி பிள்ளையே
94. வேழ முகத்தோனே
95. வையத்துக் காவலனே
96. ரௌத்திரம் குறைப்பவனே

97. அரனார் திருமகனே
98. ஆனந்த வடிவமே
99. இன்னிசை நாதமே
100. ஈகையின் தருமமே
101. உருவாகும் அருவே
102. ஊமையின் மொழியே
103. எண்ணிக்கை கடந்தவனே
104. ஏகமான உண்மையே
105. ஐம்புல அதிபதியே
106. ஒன்றான தலைவனே
107. ஓதிடும் பாமாலையே
108. ஔவையின் ஆசானே

வேறு

தித்திக்கும் தமிழ் அமுதால்
பக்தியுடன் பாடினேன் உன்னருளால்
வரத்திருமகள் பாமாலை இதுவே
கரங்கூப்பி சமர்ப்பணம் செய்தேனே
அணிவாய்  அங்குச கரத்தோனே
பிணியைப் போக்கும் மருந்தே
வினைகளை அகற்றிக் காப்பாயே
சுனையாய் அருளைப் பொழிவாயே
பந்தங்கள் நீங்கிட அருள்வாயே
சிந்தையில் நீங்காது நிற்பாயே